# TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

**PRESS RELEASE No.16/2020** **Dated 10.03.2020**

The Tamil Nadu Public Service Commission in its Notification No.19/2019 dated 14.06.2019 had invited applications for selection of candidates for appointment by direct recruitment to the posts included in Combined Civil Services Examination-IV (Group-IV Services) 2018-2019 and 2019–2020. The Written Examination was held on 01.09.2019 and results published on 12.11.2019. In order to verify the genuineness of claim of the candidates made in their on-line application regarding age, educational and technical qualifications, community etc Original Certificate Verification cum Counselling is scheduled to be held at the O/o Tamil Nadu Public Service Commission, TNPSC Road, VOC Nagar, Chennai – 600 003 from 20.03.2020 to 31.03.2020 (except 22.03.2020, 25.03.2020 & 29.03.2020).

2) The list of candidates who have been provisionally admitted for the original Certificate Verification cum Counselling for the post of Typist have been shortlisted based on Technical Qualification and merit, overall rank, Rule of Reservation of appointments and number of vacancies and the list of candidates have been hosted in the Commission's Website. They should bring all essential Original Certificates as per their claim in their online application. Candidates are hereby informed to download the Memorandum of Admission to Original Certificate Verification cum Counselling through the Commission's Web-site viz www.tnpsc.gov.in and also directed to attend the Certificate Verification cum Counselling on the scheduled date / time without fail.

3) The allotment to the post is strictly provisional subject to availability of vacancies in their respective reservation categories when they reach their turn as per their rank, rule of reservation and subject to their eligibility.

4) Candidates who do not appear for original Certificate Verification cum Counselling on the scheduled date and time allotted to them will lose their opportunity in the combined merit list and they will not be given any further chance to appear for the same.

**Dated:10.03.2020** **Secretary**

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**செய்தி வெளியீட்டு எண்:16/2020** **நாள்:10.03.2020**

ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வு-IV (தொகுதி IV-ல் அடங்கிய பதவிகள்) 2018-2019 மற்றும் 2019-2020- [Combined Civil Services Examination-IV (Group-IV Services)]- இல் அடங்கிய பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், **14.06.2019** ஆம் நாளிட்ட அறிவிக்கை எண்.**19/2019** வாயிலாக விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. இப்பதவிகளுக்கான எழுத்துத் தேர்வு கடந்த **01.09.2019** அன்று நடைபெற்று எழுத்துத் தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண் விவரங்கள் 12.11.2019 அன்று வெளியிடப்பட்டது.

இத்தெரிவு தொடர்பான மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு சென்னை-3, தேர்வாணைய சாலை (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்) உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் 20.03.2020 முதல் 31.03.2020 வரை (22.03.2020, 25.03.2020 & 29.03.2020 நீங்கலாக) நடைபெற உள்ளது.

மேற்படி தட்டச்சர் பதவிக்கான சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் அரசு தொழில்நுட்ப கல்வித் தகுதியான தட்டச்சர் தேர்வில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முதுநிலை தேர்ச்சி மற்றும் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண், ஒட்டுமொத்த தரவரிசை எண், இட ஒதுக்கீட்டு விதி மற்றும் காலிப்பணியிடங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தற்காலிகப் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் (**www.tnpsc.gov.in)** வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களது இணையவழி விண்ணப்பத்தில் கோரிய கல்விச்சான்று மற்றும் அனைத்து இன்றியமையாத சான்றிதழ்களை நேரில் கொண்டுவர வேண்டும்.

சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்பட்டவர்களின் சான்றிதழ் சரிபார்ப்பு / கலந்தாய்விற்கான தேதி, நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய “அழைப்புக்கடிதத்தினை” தேர்வாணைய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். விண்ணப்பதாரர்களுக்கு கலந்தாய்வு அழைப்பாணை தனியே அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் அவரவர் தொழில்நுட்பக் கல்வித் தகுதி, எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை / இடஒதுக்கீட்டு விதிகள் / விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மற்றும் நிலவும் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படுவர். எனவே அழைக்கப்படும் அனைவருக்கும் பணி நியமனம் வழங்கப்படும் என்பதற்கான உத்தரவாதம் வழங்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அவர்களுக்கு உரிய நாட்களில் வரத்தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**நாள்:10.03.2020** செயலாளர்